THE HINDU 07 FEB 2025

# Erode East bypoll records a turnout of 67.97%

The Hindu Bureau
ERODE

The byelection to the Erode (East) Assembly constituency witnessed a turnout of 67.97% on Wednesday. This is lower than the 74.79% recorded during the 2023 byelection in the constituency.

Polling began at 7 a.m. at 237 stations in 53 locations, and concluded at 6 p.m.

The decline in the turnout could be attributed to the AIADMK and the BJP boycotting the byelection, as many of their functionaries refrained from voting. Though brisk polling was observed in the morning, the final hour saw a poor turnout at most polling stations in the constituency.

The counting of the votes would take place at the Government College of Engineering in Chithode on Saturday.

Scanned with OKEN Scanner

THE HINDU 07 FEB 2025

# Four-tier security cover in place at counting centre in Erode

The Hindu Bureau
ERODE

A four-tier security cover has been in place at the counting centre at the Government College of Engineering (formerly I.R.T.T) in Chithode, where the Electronic Voting Machines (EVMs) used in 237 polling stations during the by-election to the Erode (East) Assembly constituency on February 5 are being kept.

Following the conclusion of Wednesday's polling, which recorded a voter turnout of 67.97%, all EVMs and Voter Verifiable Paper Audit Trails (VVPATs) machines were sealed, transported to the centre.

They were verified by election officials, and placed in strong rooms in the Mechanical Department block of the college.

On Thursday, the rooms were sealed in the presence of District Election Officer and Collector Raja Gopal Sunkara, General Observer Ajay Kumar Gupta, Returning Officer and Corporation Commissioner H.S. Srikanth, Superintendent of Police G. Jawahar, and candidates' agents.

The Collector said 78 CCTV cameras had been installed for round-the-clock monitoring. He added that 183 policemen were on duty and that the seals would be removed on the day of counting, February 8.

Scanned with OKEN Scanner

DECCAN CHRONICLE

07 FEB 2025

# Erode East bypoll: Voter turnout dips by 6.72 per cent in 2025

ERODE, FEB. 6

Voter turnout in the byelection held for the Erode East Assembly Constituency on Feb. 5 has decreased by 6.72 per cent compared to the 2023 bypoll, according to Election officials.

In 2023, the constituency witnessed 74.69 per cent polling, where Congress candidate EVKS Elangovan was declared elected, defeating his nearest rival K S Thennarasu (AIADMK) by 66,233 votes. In 2025, the bypoll was necessitated following the death of Elangovan.

A total of 67.97 per cent of voting was recorded in Erode east Assembly bypoll, authorities said late on Wednesday. There were 46 candidates, including 44 independents, in the fray and the contest was only between the ruling DMK's VC Chandirakumar and Tamil nationalist party, Naam Tamizhar Katchi's (NTK) M K Seethalakshmi.

All the EVMs from 237 polling stations were sent to the Institute of Road and Transport Technology, Chitode where the counting of votes will be held on Feb. 8.A four-tier security has been provided in the strong room where Electronic Voting Machines (EVMs) are kept, police said.

—PTI

Scanned with OKEN Scanner

THE NEW INDIAN EXPRESS 07 FEB 2025

# Four-tier security for strong room

EXPRESS NEWS SERVICE
@ Coimbatore

EVMs used in the bypoll in Erode East constituency have been placed in the strong room at the Government Engineering College. District Election Officer and Erode Collector Raja Gopal Sunkara said four-tier security has been provided to the counting centre, and 183 police personnel will be on duty on a shift basis.

The room was sealed in the presence of general election observer Ajaykumar Gupta, candidates, and agents of candidates. As per instructions of the election commission, a total of 78 CCTV cameras have been fixed in the administrative block, and the room is monitored round the clock.

"CCTVs are monitoring the strong room door, pathway, and the college campus. We have issued identity cards to agents, and they will be monitoring the CCTV feed," the collector said.



District Election Officer Raja Gopal Sunkara sealing the strong room in the govt engineering college | EXPRESS

He has also allotted counting works to election officials for February 8, through the election commission website in the presence of the returning officer and Erode corporation commissioner HS Srikanth.

A total of 852 ballot units, 285 control units, and 308 VVPAT machines were used in election.

On Thursday, Naam Tamilar Katchi candidate MK Seetha Lakshmi issued a statement alleging that information related to split up votes of male, female and third gender' and details of postal votes were not released.

"We suspect something is fishy, as despite media persons repeatedly requesting election officials to give details, officials did not give it till Thursday evening. Also, the officers did not take action regarding our complaints about impersonation of voters and fake votes," said Seethalakshmi.

Condemning the officials for not giving information, Press and media persons are going to stage a protest by dharna protest by tieing black cloth in mouth at the district collectorate on Friday morning.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 0 7 FEB 2025

# ஈரோடு கிழக்கு வாக்கு எண்ணும் மையத்தில் 78 கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பு

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதியில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில், 78 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக, மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்தார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. இத்தேர்தலில் 67.97சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. வாக்குகள் எண்ணும் பணி நாளை (8-ம் தேதி) நடக்கிறது.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா கூறியதாவது:

அரசினர் பொறியியல் கல்லூரி பாதுகாப்பு இருப்பறையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு தேர்தல் பொது பார்வையாளர், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் 'சீல்' இடப்பட்டது. மேலும், வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் தொடர்ந்து கண்காணிக்க, அலுவலக நிர்வாக கட்டிடத்தில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு இருப்பறையானது 4 அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

இதில் மொத்தமாக 183-க்கும் மேற்பட்ட காவலர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, 78 சிசிடிவி கேமராக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாக்கு எண்ணிக்கை நாளான 8-ம் தேதி (நாளை) வரை தொடர்ந்து கண்காணிக்கும் பணிகள் நடைபெறும், என்றார்.

Erode East Assembly Constituency By-election.
78 CCTV cameras fixed for surveillance.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 07 FEB 2025




● ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய வாக்குப்பதிவு இயந்திரங்கள் சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு, ஆயுதம் ஏந்திய காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

Police security at counting centre.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

0 7 FEB 2025



சித்தோடு அரசு என்ஜினியரிங் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை முன்பு துணை ராணுவத்தினர் மற்றும் போலீசார் துப்பாக்கியுடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காட்சி.

### ஈரோடு கிழக்கு தொகுதியில் 67.97 சதவித ஓட்டுகள் பதிவு:

# வாக்கு எண்ணும் மையத்தில் 4 அடுக்கு பாதுகாப்பு

## ஓட்டு எண்ணிக்கை நாளை நடக்கிறது

ஈரோடு, பிப்.7-

ஈரோடு கிழக்கு தொகுதியில் பதிவான ஓட்டுகள் நாளை எண்ணப்படுகிறது. வாக்கு எண்ணும் மையத்தில் 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### இடைத்தேர்தல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடந்தது. தி.மு.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களுடன் 46 பேர் போட்டியிட்டனர். 53 இடங்களில் அமைக்கப்பட்டு இருந்த 237 வாக்குச்சாவடிகளில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது.

3 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், ஒரு கட்டுப்பாட்டு கருவி, ஒரு வி.வி.பேட் கருவி என வாக்குச்சாவடியில் எந்திரங்கள் பொருத்தப்பட்டு இருந்தன. காலை முதல் மாலை வரை வாக்காளர்கள் ஆர்வமாக வந்து ஓட்டுப்போட்டனர். இறுதியில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருந்ததாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பாதுகாப்பு அறை

ஓட்டுப்பதிவுக்கு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு, சித்தோட்டில் உள்ள அரசு என்ஜினியரிங் கல்லூரி (ஐ.ஆர்.டி.டி.) வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு பாதுகாப்பு அறையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வரிசைப்படி அடுக்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து ஈரோடு மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான ராஜகோபால் சுன்கரா, தேர்தல் பொதுப்பார்வையாளர் அஜய்குமார் குப்தா ஆகியோர் முன்னிலையில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான எச்.எஸ். ஸ்ரீகாந்த் பாதுகாப்பு அறையை பூட்டி சீல்வைத்தார். மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜி.ஜவகர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### 4 அடுக்கு பாதுகாப்பு

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டு உள்ள பாதுகாப்பு அறை மற்றும்



சித்தோடு அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டு உள்ள பாதுகாப்பு அறைக்கு, கலெக்டர் ராஜகோபால் சுன்கரா, தேர்தல் பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா ஆகியோர் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அதிகாரி ஸ்ரீகாந்த் 'சீல்' வைத்த போது எடுத்த படம்.



மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டு உள்ள சித்தோடு அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் கண்காணிப்பு கேமராவில் பதிவாகும் காட்சிகளை அதிகாரி ஒருவர் பார்வையிட்ட போது எடுத்த படம்.

Erode East Assembly Constituency By-election.
67.97% of polling.
Four-tier security for the counting centre.
Counting starts tomorrow.

ணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பெட்டி பாதுகாப்பு அறை 4 அடுக்கு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. 193 போலீசார் மற்றும் துணை

கிழமை) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இதை முன்னிட்டு வாக்கு எண்ணும் மையம் தயார் நிலையில்

யின் நுழைவு வாயில் அருகே நின்று தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

தினமலர் 07 FEB 2025

### எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பால்

# ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவு சரிந்தது

ஈரோடு, பிப்.7-

ஈரோடு கிழக்குத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நேற்று முன்தினம் அமைதியான முறையில் நடந்து முடிந்தது. திமுக சார்பில் சந்திரகுமாரும், நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமியும் போட்டியிட்டனர். முக்கிய எதிர்க்கட்சிகளான அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள், பாஜ மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் இடைத்தேர்தலை புறக்கணித்தன. இந்த தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. மொத்தம் 2.27 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையில் 53 இடங்களில் 237 வாக்கு சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. பொது மக்களுக்கும் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியது. ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கு ஒரு முறை தேர்தலில் பதிவான வாக்கு சதவீதம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி காலை 9 மணி அளவில் 10.95 சதவீதமும், 11 மணி அளவில் 26.03 சதவீதமும், மதியம் 1 மணி அளவில் 42.41 சதவீதமும், மதியம் 3 மணி அளவில் 53.63 சதவீதமும், மாலை 5 மணி அளவில் 64.02 சதவீதமும் பதிவானது. அதைத் தொடர்ந்து இறுதியாக ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 67.97 சதவீதம் பதிவ்ானதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. கடந்த 2023ம் ஆண்டு நடந்த இடைத்தேர்தலை விட 7 சதவீதம் வாக்குப்பதிவு குறைந்துள்ளது. 2023ம் ஆண்டு தேர்தலில் 74.69 சதவீதம் வாக்குப்பதிவாகி இருந்தது. இந்த இடைத் தேர்தலில் அதிமுகவினர் மற்றும் கூட்டணி கட்சியினர், பாஜ மற்றும் கூட்டணி கட்சியினர் யாரும் வாக்கு செலுத்தாமல் புறக்கணித்து விட்டனர். இதனால் வாக்கு சதவீதம் பெரிதும் சரிந்தது. ஈரோடு கிழக்கு தொகுதியை பொருத்தவரை அ.தி.மு.க.வுக்கு என்று கணிசமான வாக்கு வங்கி உள்ளது.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தேர்தல் புறக்கணிப்பு அறிவித்ததால் அதிமுக நிர்வாகிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் யாரும் வாக்கு பதிவை செலுத்தாமல் புறக்கணித்தனர். இதனால் கடந்த ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் வாக்கு பதிவை விட இந்த முறை வாக்குப்பதிவு 7 சதவீதம் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

Polling decreased due to boycotting the election by opposite parties.

Scanned with OKEN Scanner

தினமலர் 07 FEB 2025

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் பதிவான வாக்குகள்

ஈரோடு, பிப்.7-
ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நேற்று முன்தினம் பதிவான வாக்குகள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த வாக்காளர்கள்:

ஆண்-1,10,128-
பெண்-1,17,381

இதர வாக்காளர்கள்-37

பதிவானவை
ஆண்- 74,260-

பெண்-80,376-

இதர வாக்காளர்கள்-21

மொத்தம் -1,54,657

பதிவான சதவீதம்-67.97.

இதில் 72 ஆயிரத்து 889 பேர் அதாவது 32.03 சதவீதம் பேர் வாக்களிக்கவில்லை.

நாளை (8ம் தேதி) சித்தோடு ஐ.ஆர்.டி.டி கல்லூரியில் ஓட்டு எண்ணிக்கை நடைபெறுகிறது.

மதியத்திற்குள் முன்னணி நிலவரம் தெரியவரும்.

Erode East Assembly Constituency By-election.
Details of polling released.

Scanned with OKEN Scanner

தினமலர் 0 7 FEB 2025

# ஈரோட்டில் பறிமுதல் செய்யப்பட்ட பணம் ரூ.41.85 லட்சம் திரும்ப ஒப்படைப்பு

ஈரோடு, பிப். 7-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் நேற்று முன்தினம் நடந்த முடிந்துள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த 7ம் தேதி வெளியான உடனேயே ஈரோடு கிழக்குத் தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. இதையடுத்து பொதுமக்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் தீவிர வாகன சோதனை மேற்கொண்டு வந்தனர்.

இதில் ரூ. 50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச்செல்லப்பட்ட பணத்தை பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து அதனை ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலர்களிடம் ஒப்படைத்தனர். அதன்படி கடந்த 7ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு வரப்பட்டதாக 31 பேரிடமிருந்து ரூ.54 லட்சத்து 13 ஆயிரத்து 60 - ஐ அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதில் ஆவணங்களை வழங்கியதால் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.41 லட்சத்து 85 ஆயிரத்து 560 உரியவர்களிடம் திரும்ப ஒப்படைத்தனர். மீதம் ரூ.12 லட்சத்து 27 ஆயிரத்து 500 பணம் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election. Rs.41.85 Lakhs returned on submitting the proper documents.

Scanned with OKEN Scanner

தினமலர்

0 7 FEB 2025




ஈரோடு கிழக்கு தொகுதி ஓட்டு எண்ணிக்கை நடைபெறும் சித்தோடு அரசினர் இன்ஜினியரிங் கல்லூரியில் துணை ராணுவம் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



ஈரோடு கிழக்குத் தொகுதி எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு மிஷின்கள் சித்தோடு ஐஆர்டிடி கல்லூரி ஸ்ட்ராங் ரூமில், அனைத்து கட்சியினர், தேர்தல் பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா, கலெக்டர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு எஸ்.பி ஜவகர் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது.

Erode East Assembly Constituency By-election.
EVMs are kept in the strong room and sealed.
Four-tier security arranged.

Scanned with OKEN Scanner

தினமலர் 07 FEB 2025

## ஈரோடு கிழக்கு தொகுதி

# எம்.எல்.ஏ யார்? நாளை தெரியும்

ஈரோடு, பிப்.7-

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. யார் என்பதற்கு நாளை விடை தெரியும்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் நேற்று முன் தினம் நடைபெற்றது. மொத்தம் உள்ள 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 பேர் வாக்களிக்கும் வகையில் 53 இடங்களில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு வாக்குப்பதிவு நடைபெற்றது. பதற்றமான 9 வாக்குச்சாவடி மையங்களில் கூடுதலாக போலீஸ் பாதுகாப்பு, துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். தேர்தலில் 46 வேட்பாளர்கள் போட்டியிட்டதால் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தலா 3 எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஒரு கட்டுப்பாட்டு கருவி, ஒரு வி.வி. பேட் கருவி பயன்படுத்தப்பட்டன. காலை 6 மணிக்கு மாதிரி வாக்குப்பதிவு தொடங்கியது. அதைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்தது. காலை முதல் மக்கள் ஆர்வத்துடன் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். பின்னர் மதிய நேரம் வெயிலின் காரணமாக வாக்குப் பதிவில் சிறிது சுணக்கம் ஏற்பட்டது.

பின்னர் மாலை நேரம் மீண்டும் விறுவிறுப்பாக வாக்குப் பதிவு நடைபெற்றது. மாலை 6 மணியுடன் வாக்குப் பதிவு நிறைவடைந்தது. 5 மணிக்கு முன்பாக வந்தவர்களுக்கு மட்டும் டோக்கன் அடிப்படையில்

Who is the Erode East Assembly Constituency MLA?
Get to know tomorrow.

அளவில் 10.95 சதவீதமும், 11 மணி அளவில் 26.03 சதவீதமும், மதியம் 1 மணி அளவில் 42.41 சதவீதமும், மதியம் 3 மணி அளவில் 53.63 சதவீதமும், மாலை 5 மணி அளவில் 64.02 சதவீதமும் பதிவானது. அதைத் தொடர்ந்து இறுதியாக ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 67.97 சதவீதம் பதிவானதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

கடந்த 2023ம் ஆண்டு நடந்த இடைத்தேர்தலை விட 7 சதவீதம் வாக்குப்பதிவு குறைந்துள்ளது. 2023ம் ஆண்டு தேர்தலில் 74.69 சதவீதம் வாக்குப்பதிவாகி இருந்தது.

வாக்குப்பதிவு முழுமை அடைந்தவுடன், ஓட்டு போட்ட வாக்காளர்கள் பட்டியல் சரிபார்க்கப்பட்டது. பதிவு எண்ணிக்கையும் சரிபார்க்கப்பட்டது. பின்னர் முகவர்கள் முன்னிலையில் எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள், விவி பேட் கருவிகள் அந்தந்த வாக்குச்சாவடி அலுவலர்களால் சீல் வைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து மண்டல தேர்தல் அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருந்த வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்குப் பதிவு இயந்திரங்களை பெற்றுக் கொண்டனர். அப்போது படிவங்கள் அனைத்தும் சரியாக இருப்பதை உறுதி செய்தனர். எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மண்டலம் வாரியாக சேகரிக்கப்பட்டன. பின்னர் ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலம் வாக்குப்

ஓட்டு எண்ணும் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. பாதுகாப்பு அறையின் உள்ளேயும் வெளியேயும் பொருத்தப்பட்டு உள்ள கண் காணிப்பு கேமராக்கள் சரியாக இயங்குவதை கட்டுப்பாட்டு அறையில் இருந்து அதிகாரிகள் பார்வையிட்டனர். பாதுகாப்பு அனைத்தும் உறுதி செய்யப்பட்ட பிறகு வாக்குப்பதிவு இயந்தி ரங்கள் வைக்கப்பட்டுள்ள அறை க்கு முகவர்கள் முன்னிலையில் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இந்த பணி நள்ளிரவு வரை நடந்து அதிகாலை 4 மணிக்கு நிறைவ டைந்தது.

இத்னை தொடர்ந்து வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதி மற்றும் வாக்கு எண்ணிக்கை மையம் முழுவதும் கண்காணிப்பு வளையத்திற்குள் 4 அடுக்கு பாதுகாப்பு கொண்டு வரப்பட்டது.

முதல் அடுக்கில் மத்திய தொழிற்பாதுகாப்பு படையினரும், 2ம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீசாரும், 3ம் அடுக்கில் ஆயுதப்படை போலீசாரும், 4-ம் அடுக்கில் உள்ளூர் போலீசார் என 400 போலீசார் தொடர்ந்து 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

மேலும் தீ போன்ற அசம்பாவிதங்களை தடுக்க தீயணைப்பு வீரர்களும் வாகனங்களுடன் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து நாளை (சனிக்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

அறிவிக்கப்படுகிறது.


Scanned with OKEN Scanner


தினமணி

07 FEB 2025

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# வாக்கு எண்ணிக்கை மையத்துக்கு 4 அடுக்கு பாதுகாப்பு





வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறை முன் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மத்திய துணை ராணுவப் படையினர். (வலது) வாக்கு எண்ணிக்கை மையமான ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி நுழைவாயிலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள போலீஸார்.

ஈரோடு, பிப். 6: ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணிக்கை மையத்தின் பாதுகாப்பு அறையில் வைத்து சீலிடப்பட்டது. இங்கு, 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு கிழக்கு சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப் பதிவு 237 வாக்குச் சாவடிகளில் புதன்கிழமை நடைபெற்றது. வாக்குப் பதிவு அன்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து, அனைத்து வாக்குச் சாவடிகளும் மூடப்பட்டு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அரசியல் கட்சியின் வாக்குச் சாவடி முகவர்களின் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு, 24 மண்டல அதிகாரிகள் ஒவ்வொரு வாக்குச் சாவடி மையத்துக்கும் சென்று, வாக்குச் சாவடி முதன்மை அலுவலர்களிடம் இருந்து வாக்குப் பதிவு இயந்திரங்களை பெற்று ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துணை ராணுவம், போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு அனுப்பிவைத்தனர்.

237 வாக்குச் சாவடிகளில் இருந்து வாக்குப் பதிவு இயந்திரங்கள் ஏற்றி வந்த கடைசி வாகனம் வியாழக்கிழமை அதிகாலை சுமார் 4.30 மணியளவில் வாக்கு எண்ணிக்கை மையத்துக்கு வந்து சேர்ந்தது.

இதைத் தொடர்ந்து, அங்கு உள்ள பாதுகாப்பு அறையில் வாக்குச் சாவடி வாரியாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு, தேர்தல் பொதுப் பார்வையாளர் அஜய்குமார் குப்தா, மாவட்டத் தேர்தல் அலுவலர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.ஜவகர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறை வியாழக்கிழமை காலை பூட்டி 8சீல் வைக்கப்பட்டது.

**துணை ராணுவ வீரர்கள் பாதுகாப்பு:** வாக்கு எண்ணிக்கை மையத்தில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. முதல் அடுக்கில் பாதுகாப்பு அறை பகுதியைச் சுற்றியும் மத்திய தொழிலகப் பாதுகாப்பு படையினர், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீஸார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப் படை போலீஸார், நான்காம் அடுக்கில் உள்ளூர் போலீஸார் என 24 மணி நேரமும் 400-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

**78 கேமராக்கள் மூலம் கண்காணிப்பு:** பாதுகாப்பு அறை வெளிப் பகுதி, நடைபாதை, சாலை, வளாகம் ஆகிய பகுதிகளில் 78 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறையில் இருந்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், வாக்கு எண்ணிக்கை மையத்துக்குள் வரும் வேட்பாளர்கள், முகவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு உள்ளே வரும் நபர்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

**நாளை வாக்கு எண்ணிக்கை:** ஈரோடு இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் சனிக்கிழமை (பிப்ரவரி 8) எண்ணப்படுகின்றன. 4 மேஜைகள் அமைக்கப்பட்டு வாக்குகள் எண்ணப்படுகின்றன. இதில், ஒவ்வொரு மேஜையிலும் வாக்கு எண்ணிக்கை அலுவலர், உதவி அலுவலர், நுண்பார்வையாளர் உள்ளிட்ட 3 பேர் மற்றும் கூடுதல் அலுவலர் என மொத்தம் 51 பேர் ஈடுபடவுள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
Four-tier security arranged at counting centre.

Scanned with OKEN Scanner

தினகரன் 07 FEB 2026

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# நாளை வாக்கு எண்ணிக்கை

## பலத்த பாதுகாப்பு ஏற்பாடு





▶ வாக்கு எண்ணிக்கை மையத்தில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அங்கு ராணுவத்தினர் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஈரோடு, பிப்.7: ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலிலும் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு கொண்டு வரப்பட்டு, 'ஸ்ட்ராங் ரூமில்' வைத்து பூட்டி சீல் வைக்கப்பட்டது. நாளை வாக்குகள் எண்ணப்படுகின்றன.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் கடந்த டிசம்பர் மாதம் 14ம் தேதி மரணமடைந்ததையடுத்து. இத்தொகுதிக்கான இடைத்தேர்தலை கடந்த ஜனவரி மாதம் 7ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டன. இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார், நாதக வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் உள்ளிட்ட 46 பேர் போட்டியிட்டனர். இந்த தேர்தலில் ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்களிக்க 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. வாக்குப்பதிவு நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது. வயதானவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்து தரப்பினரும் ஆர்வமுடன் வாக்குச்சாவடிக்கு வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து, தங்களது வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவு செய்தனர். தேர்தலில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவானது. வாக்குப்பதிவு நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து அனைத்து வாக்குச்சாவடிகளும் மூடப்பட்டு, வாக்குப்பெட்டிகள் அரசியல் கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களின் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன. 24 மண்டல அதிகாரிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று, வாக்குச்சாவடி முதன்மை அலுவலர்களிடம் இருந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை பெற்றனர். பின்னர் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம், போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. 237 வாக்குச்சாவடிகளில் இருந்தும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஏற்றி வரப்பட்டன. அந்த வகையில் கடைசி வாகனம் நேற்று அதிகாலை சுமார் 4.30 மணியளவில் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வந்து சேர்ந்தது. அதைத்தொடர்ந்து, அங்கு உள்ள 'ஸ்ட்ராங் ரூமில்' வாக்குச்சாவடி வாரியாக இயந்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டு, தேர்தல் பொதுபார்வையாளர் அஜய்குமார் குப்தா, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த், ஈரோடு எஸ்பி ஜவகர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது. தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மையம் முழுவதும் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டது. அங்கு 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. முதல் அடுக்கில் ஸ்ட்ராங் ரூம் பகுதியை சுற்றியும் மத்திய தொழிற்பாதுகாப்பு படையினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப்படை போலீசார், நான்காம் அடுக்கில் லோக்கல் போலீசாரும் 24 மணி நேரமும் 3 ஷிப்ட் முறையில் 400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர். இதேபோல், தீ போன்ற அசம்பாவித சம்பவத்தை தடுக்க தீயணைப்பு வீரர்களுடன் வாகனத்துடன் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர். வாக்கு எண்ணிக்கை மையத்தில் உள்ள ஸ்ட்ராங் ரூம் வெளிப்புறம், நடைபாதை, சாலை, வளாகம் போன்றவற்றை கண்காணிக்க தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 78 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறையில் இருந்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், வாக்கு எண்ணிக்கை மையத்திற்குள் வரும் வேட்பாளர்கள், முகவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, உள்ளே வரும் நபர்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். ஈரோடு இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை (8ம் தேதி) காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 14 மேஜைகளில் எண்ணப்பட உள்ளன. இப்பணியில் ஒவ்வொரு மேஜைகளிலும் வாக்கு எண்ணிக்கை அலுவலர், உதவி அலுவலர், நுண் பார்வையாளர் உள்ளிட்ட 3 பேர் மற்றும் கூடுதல் அலுவலர் என மொத்தம் 51 பேர் ஈடுபட உள்ளனர். நாளையே இடைத்தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட உள்ளது.



▶ வாக்கு எண்ணிக்கை மையத்திற்குள் நுழைகின்ற வாகனங்கள் பலத்த பரிசோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்பட்டு வருகின்றன.



▶ சித்தோடு அரசு பொறியியல் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள பாதுகாக்கப்பட்ட அறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

### அரசியல் கட்சியினர் மீது 21 வழக்குகள் பதிவு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான நடத்தை விதிமுறைகள் கடந்த ஜனவரி மாதம் 7ம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டு, விதிகளை மீறும் அரசியல் கட்சியினர், வேட்பாளர்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து வந்தனர். தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கொடி கம்பங்கள் நட்டியது, முன் அனுமதியின்றி கூட்டம் நடத்தியது, அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட கூடுதலாக பிரசாரம் செய்தது, வாக்கு கேட்டு விளம்பர பதாகைகளை வைத்தது என நாதக மற்றும் திமுகவினர் மீது இதுவரை 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாக்கு கேட்டு பிளக்ஸ் பேனர்கள் வைத்ததாக மட்டும் 4 வழக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 6.82 சதவீதம் வாக்குகள் குறைவு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நேற்று முன்தினம் 67.97 சதவீத வாக்குகள் பதிவானது.

இதே தொகுதிக்கு கடந்த 2023ம் ஆண்டு இடைத்தேர்தல் நடந்த போது 74.79 சதவீதம் வாக்குகள் பதிவாகின. கடந்த இடைத்தேர்தலைவிட தற்போது 6.82 சதவீதம் குறைவான வாக்கு பதிவாகியுள்ளது. இந்த இடைத்தேர்தலில் அதிமுக, பாஜ உள்ளிட்ட எதிர்கட்சிகள் போட்டியிடவில்லை. இதனால், அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகள் வாக்களிக்காமல் புறக்கணித்தனர். கட்சியினரும் வாக்களிக்க வரவில்லை. இதனால் வாக்கு சதவீதம் குறைந்துள்ளதாக அதிகாரிகளும், அரசியல் வட்டாரத்தினரும் தெரிவித்தனர்.


Erode East Assembly Constituency By-election.
Counting tomorrow.
Tight security arranged.
6.82% percentage of polling decreased.
21 cases filed on political party members.

Scanned with OKEN Scanner

தினகரன் 07 FEB 2025

## கிழக்கு தொகுதி தேர்தல்

# வாக்கு எண்ணும் பணியாளர்களுக்கு ஈரோட்டில் இன்று பயிற்சி



▸ சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் உள்ள மீடியா சென்டரை கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு,பிப்.7: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுவதை அடுத்து, அதில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இன்று (7ம் தேதி) பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, நேற்று முன்தினம் 237 வாக்குச்சாவடிகளிலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்குகளைச் செலுத்தினர். 67.97 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன. இதையடுத்து, சித்தோடு ஐஆர்டிடியில் உள்ள வாக்கு எண்ணும் மையத்திற்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டன. வாக்கு எண்ணும் பணி நாளை (8ம் தேதி) நடைபெற உள்ளது. இந்த வாக்கு எண்ணிக்கை 14 மேஜைகளில் எண்ணப்பட உள்ளன. இப்பணியில் ஒவ்வொரு மேஜைகளிலும் வாக்கு எண்ணிக்கை அலுவலர், உதவி அலுவலர், நுண்பார்வையாளர்கள் உள்ளிட்ட 3 பேர், கூடுதல் அலுவலர் ஒருவர் என 51 பேர் ஈடுபட உள்ளனர். இவை தவிர, வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்து வைத்தல் மற்றும் பிற பணிகளுக்கு, 50க்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட உள்ளனர்.

இந்நிலையில், வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலருக்கும், வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்து வைத்தல் பணியில் ஈடுபடக்கூடிய பணியாளர்களுக்கும், மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் இன்று (7ம் தேதி) பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்த பயிற்சிக்கு பின்னர், நாளை (8ம் தேதி) காலை 5 மணிக்கு எந்த பணியாளர்கள் எந்த மேஜைக்கு பணிக்குச் செல்வர் என்று தேர்வு செய்து அவர்களுக்கு தெரிவிக்கப்பட இருப்பதாகவும், அதேபோன்று பிற பணியாளர்களுக்கு ஒதுக்கப்படும் பணி குறித்தும் தெரிவிக்கப்பட இருப்பதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Training for the counting officials.

Scanned with OKEN Scanner

தினகரன் 0 7 FEB 2025

ஈரோடு இடைத்தேர்தலையொட்டி பறிமுதல் செய்யப்பட்ட

# ரூ.41.85 லட்சம் உரியவர்களிடம் ஒப்படைப்பு

ஈரோடு,பிப்.7: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, தேர்தல் பறக்கும் படையினரால் பணம் பறிமுதல் செய்யப்பட்டு வந்த நிலையில், உரிய ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டதால் இதுவரை ரூ.41.85 லட்சம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, கடந்த ஜனவரி 7ம் தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. அதனைத்தொடர்ந்து, பொது மக்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில், 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, ஈரோடு கிழக்கு தொகுதியில் 24 மணி நேரமும் தீவிர வாகனச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இவை தவிர, கிழக்குத் தொகுதியில் 12 இடங்களில் தற்காலிக சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு, ஈரோடு மாநகர் பகுதிக்குள் வந்த வாகனங்கள் கண்காணிக்கப்பட்டு வந்தன.

இதில் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட பணங்களை பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து வந்தனர். பறிமுதல் செய்யப்பட்ட பணம், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. அதன்படி, கடந்த 7ம் தேதி முதல் நேற்று முன்தினம் (5ம் தேதி) வரை உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு வரப்பட்டதாக, 31பேரிடமிருந்து ரூ.54 லட்சத்து 13 ஆயிரத்து 60யை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதில், உரிய ஆவணங்களை வழங்கியதால், பறிமுதல் செய்யப்பட்ட ரூ.41லட்சத்து 85 ஆயிரத்து 560 உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதம் ரூ.12 லட்சத்து 27 ஆயிரத்து 500 ரொக்கம் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Rs.41.85 Lakhs returned on submitting the proper documents.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 0 7 FEB 2025

# ஈரோடு இடைத்தேர்தலில் சரிந்த ஓட்டுப்பதிவு

## வாக்காளர்களுக்கு 'சலிப்பு'; அ.தி.மு.க., புறக்கணிப்பு

ஈரோடு, பிப். 7-

ஈரோடு கிழக்கு தொகுதியில், நான்கு ஆண்டுகளில் அடுத்தடுத்து வந்த பல்வேறு தேர்தல்களாலும், பிரதான கட்சியான அ.தி.மு.க., புறக்கணித்ததாலும், ஓட்டுப்பதிவு சரிந்துள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நேற்று முன்தினம் ஓட்டுப்பதிவு நடந்தது. இதில், 67.97 சதவீத ஓட்டு பதிவாகியுள்ளது. தி.மு.க., – நா.த.க., உட்பட, 46 வேட்பாளர்கள் போட்டியில் இருந்தாலும், பிரதான இந்த இரு கட்சி வேட்பாளர்களே களத்தை ஆக்கிரமித்தனர்.கடந்த, 2021ல் 66.24 சதவீதம், 2023 இடைத்தேர்தலில், 74.79 சதவீதம், கடந்த, 2024 லோக்சபா தேர்தலில், 66.05 சதவீதம் ஓட்டுப்பதிவானது. தற்போதைய இடைத்தேர்தலில், 2023ஐ விட, 6.82 சதவீத ஓட்டு குறைந்துள்ளது. இதுபற்றி தி.மு.க., மூத்த நிர்வாகிகள் கூறியதாவது:

கடந்த, 2023 இடைத்தேர்தலில் அனைத்து அமைச்சர்கள், எம்.பி.,க்கள், எம்.எல்.ஏ.,க்கள், மாவட்ட செயலாளர்கள் வார்டு வார்டாக பிரித்து களமிறங்கியதாலும், கடும் கவனிப்பாலும் ஓட்டு சதவீதம் அதிகமானது. இம்முறை மாவட்ட அமைச்சர் முத்துசாமி, கூட்டணியில் காங்., செல்வபெருந்தகை, தங்கபாலு, திருநாவுக்கரசர், இ.கம்யூ., முத்தரசன் மட்டுமே பிரசாரம் செய்தனர். கடந்த இடைத்தேர்தலில் காங்., போட்டியிட்டாலும் அதிக கவனம் செலுத்தினர். தற்போது தி.மு.க., களமிறங்கினாலும், 2026 தேர்தலுக்கு முன்னோட்டம் எனக்கூறி அடக்கி வாசித்தனர். அ.தி.மு.க., – தே.மு.தி.க., புறக்கணித்ததால், அக்கட்சி முக்கிய நிர்வாகிகள், அவர்களை சார்ந்தோர் ஓட்டுப்போடவில்லை. பா.ஜ.,விலும் இதே நிலைதான். அதேசமயம் காங்கிரசில், தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் தொண்டர்கள், நிர்வாகிகள் புறக்கணித்துள்ளதும் தெரிய வந்துள்ளது. கடந்த நான்காண்டில் இம்மாவட்டத்திலும், இத்தொகுதியிலும் தி.மு.க., அரசு சொல்லிகொள்ளும்படி ஒரு திட்டம் கூட நிறைவேற்றவில்லை.

அதேசமயம், 2021ல் பொது சட்டசபை தேர்தல், 2021ல் மாநகராட்சி தேர்தல், 2023ல் முதல் இடைத்தேர்தல், 2024ல் லோக்சபா தேர்தல், தற்போது இரண்டாவது இடைத்தேர்தல் என, நான்கு ஆண்டுக்களில், ஐந்து முறை ஓட்டுப்பதிவு, கெடுபிடி, பிரசாரம், மாவட்ட அளவில் அரசு பணிகள் நடக்காதது போன்ற காரணத்தால் வாக்காளர்களுக்கும் 'சலிப்பு தட்டி', பலர் ஓட்டுப்பதிய முன்வரவில்லை. இந்த காரணங்களே ஓட்டுப்பதிவு சதவீதம் குறைய காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறு கூறினர்.

### இ.வி.எம்.,கள் அறைக்கு 'சீல்'

இடைத்தேர்தலில் பதிவான மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், ஓட்டு எண்ணிக்கை நடக்கும் சித்தோடு அரசு பொறியியல் கல்லுாரியில் ஸ்டிராங் ரூமில் வைத்து சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்த அறை, ஓட்டு எண்ணும் மையம், வளாகம், 78 'சிசிடிவி' கேமராக்களால், 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுகிறது. இப்பகுதிகளுக்கு நான்கடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் துணை ராணுவப்படையினர், இரண்டாம் அடுக்கில் பட்டாலியன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப்படை போலீசார், நான்காம் அடுக்கில் உள்ளூர் போலீசாரும் பாதுகாப்பு பணியில் உள்ளனர்.

### 17 சுற்றில் கவுன்டிங்

ஓட்டு எண்ணிக்கை நாளை நடக்கிறது. இதற்காக, 14 டேபிள்கள் அமைக்கப்பட்டு, 237 ஓட்டுச்சாவடியில் பதிவான ஓட்டுகள், 16 அல்லது 17 சுற்றில் எண்ணி முடிக்கப்படும். முன்னதாக தபால் ஓட்டு எண்ணப்படும். அதன் பிறகே மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் பதிவான ஓட்டுக்கள் எண்ணப்படும்.

Decrease of polling in Erode By-election.
Voters bored.
AIADMK boycott.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 07 FEB 2025

# ஓட்டுப்பதிவு நாளில் எந்த விதிமீறல் வழக்குமில்லை

**ஈரோடு, பிப். 7–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் ஓட்டுப்பதிவு, 237 ஓட்டுபதிவு மையங்களில் நேற்று முன்தினம் நடந்தது. பாதுகாப்பு பணியில் துணை ராணுவம், பட்டாலியன் போலீசார், ஆயுதப்படை போலீசார், லோக்கல் போலீசார் ஈடுபட்டனர். இந்த நாளில் தேர்தல் விதிமீறியதாக ஒரு வழக்கும் பதிவாகவில்லை என போலீசார் தெரிவித்தனர்.

அதேசமயம் இடைத்தேர்தல் நடத்தை விதி அமலான ஜன.,7ம் தேதி முதல் ஓட்டுப்பதிவு தினமான, பிப்., 5ம் தேதி வரை. பல்வேறு விதி மீறல் தொடர்பாக, 21 வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதில் ஓட்டு கேட்டு பிளக்ஸ் பேனர் வைத்ததாக, நான்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக, தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

No cases registered for the violation of ECC on the polling day.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 07 FEB 2025

# இன்று புறப்படும் துணை ராணுவம்

**ஈரோடு, பிப். 7-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பாதுகாப்பு பணியில், நெய்வேலி மற்றும் கொச்சியில் இருந்து மத்திய தொழில் பாதுகாப்பு படையின் (துணை ராணுவம்), இரு பிரிவுகளை சேர்ந்த, 160 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். நேற்று முன்தினம் ஓட்டுப்பதிவு நிறைவு பெற்ற நிலையில், இரு பிரிவுகளை சேர்ந்த 160 வீரர்களும், இன்று முறையே நெய்வேலி மற்றும் கொச்சிக்கு புறப்பட்டு செல்லவுள்ளனர்.

Paramilitary force departs today.

Scanned with OKEN Scanner

தமிழ் சுடர் 0 7 FEB 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணம் சமர்ப்பித்ததால் ரூ.41.85 லட்சம் திரும்ப ஒப்படைப்பு

ஈரோடு, பிப். 7

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் நேற்று நடந்த முடிந்துள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த 7-ந் தேதி வெளியான உடனேயே ஈரோடு கிழக்குத் தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது.

இதையடுத்து பொதுமக்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் தீவிர வாகன சோதனை மேற்கொண்டு வந்தனர்.

மேலும் கிழக்குத் தொகுதியில் 12 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைத்து ஈரோடு மாநகர் பகுதிக்குள் வரும் வாகனங்கள் கண்காணிக்கப்பட்டன.

இதில் ரூ. 50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட பணங்களை பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து அதனை ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

அதன்படி கடந்த 7-ந் தேதி முதல் நேற்று வரை உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு வரப்பட்டதாக 31 பேரிடமிருந்து ரூ.54 லட்சத்து 13 ஆயிரத்து 60-ஐ அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதில் ஆவணங்களை வழங்கியதால் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.41 லட்சத்து 85 ஆயிரத்து 560 உரியவர்களிடம் திரும்ப ஒப்படைத்தனர். மீதம் ரூ.12 லட்சத்து 27 ஆயிரத்து 500 பணம் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election. Rs.41.85 Lakhs returned on submitting the proper documents.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா 07 FEB 2025



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 05.02.2025 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையமான, ஈரோடு மாவட்டம், சித்தோடு, ஈரோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் ர் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில் பாதுகாப்பு இருப்பறையில் வைத்து சீலிடப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
EVMs are kept in the strong room and sealed in the presence of The Election Officer/ Erode District Collector.

Scanned with OKEN Scanner

மக்கள் முகம் 07 FEB 2025

# ஈரோட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பறையில் வைத்து சீல்

ஈரோடு பிப். 7

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு இருப்பறையில் வைத்து சீலிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாவது,



ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்லில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான சித்தோடு, ஈரோடு அரசினர் பொறியியல் கல்லூரி , ப்பாதுகாப்பு இருப்பறையில் வைக்கப்பட்டு, தேர்தல் பொது பார்வையாளர், வேட்பாளர்கள் மற்றும். வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் சீல் இடப்பட்டது. மேலும், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் தொடர்ந்து கண்காணித்திட கண்காணிப்பு கேமிராக்கள் அலுவலக நிர்வாக கட்டிடத்தில் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு இருப்பறையானது 4 அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தமாக 183-க்கும் மேற்பட்ட காவலர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, 78 சிசிடிவி கேமிராக்கள் அமைக்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அனைத்து கேமிராக்களையும் கண்காணிக்கும் வகையில் வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர் முகவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு கண்காணித்து வருகின்றனர்.

வாக்கு எண்ணிக்கை நாளான ஜனவரி 8 வரை தொடர்ந்து கண்காணிக்கும் பணிகள் நடைபெறும். என மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
EVMs are kept in the strong room and sealed.

Scanned with OKEN Scanner